**இயேசு ராஜா வந்திருக்கிறார்**
எல்லோரும் கொண்டாடுவோம்
கைதட்டி நாம் பாடுவோம் - 2

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம் - 2

1. கூப்பிடு நீ பதில் கொடுப்பார்
குறைகளெல்லாம் நிறைவாக்குவார் - 2
உண்மையாக தேடுவோரின்
உள்ளத்தில் வந்திடுவார் - 2

கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம் - 2

2. மனதுருக்கம் உடையவரே
மன்னிப்பதில் வள்ளலவர் - 2
உன் நினைவாய் இருக்கிறார்
ஓடிவா என் மகனே (ளே) - 2

3. கண்ணீரெல்லாம் துடைத்திடுவார்
கரம் பிடித்து நடத்திடுவார் - 2
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
இன்றே நிறைவேற்றுவார் - 2

4. நோய்களெல்லாம் நீக்கிடுவார்
நொடிப்பொழுதே சுகம் தருவார் - 2
பேய்களெல்லாம் நடுநடுங்கும்
பெரியவர் திரு முன்னே – நம்ம

**ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது**
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம் - 2

அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு - 2

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம்

1. எனக்கு உதவிடும் எனது ஆண்டவர்
என் பக்கம் இருக்கிறார் – 2
உலக மனிதர்கள் எனக்கு எதிராக
என்ன செய்ய முடியும் – 2

தோல்வி இல்லை எனக்கு
வெற்றி பவனி செல்வேன்
தோல்வி இல்லை நமக்கு
வெற்றி பவனி செல்வோம்

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம்

அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு - 2

2. எனது ஆற்றலும் எனது பாடலும்
எனது மீட்புமானார் – 2
நீதிமான்களின் சபைகளிலே
வெற்றி குரல் ஒலிக்கட்டும் – 2

3. தள்ளப்பட்ட கல் கட்டிடம் தாங்கிடும்
மூலைக்கல்லாயிற்று – 2
கர்த்தர் செயல் இது அதிசயம் இது
கைத்தட்டிப் பாடுங்களேன் – 2

4. என்றுமுள்ளது உமது பேரன்பு
என்று பறை சாற்றுவேன் – 2
துன்பவேளையில் நோக்கிக் கூப்பிட்டேன்
துணையாய் வந்தீரய்யா – 2 – தோல்வி

**தாவீதைப் போல நடனமாடி**
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – 2

1. என்ன வந்தாலும் எது நடந்தாலும்
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – 2

இயேசப்பா ஸ்தோத்திரம் – 4

தாவீதைப் போல நடனமாடி
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன்

2. கைத்தாளத்தோடும் மத்தாளத்தோடும்
அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – 2

3. பரிசுத்த இரத்தத்தால் பாவங்கள்
கழுவிய அப்பாவை ஸ்தோத்தரிப்பேன் – 2

4. ஆவியினாலே அபிஷேகம் செய்த
அப்பாவை ஸ்தோத்தாப்பேன் – 2

**எந்தன் கன்மலையானவரே**
என்னை காக்கும் தெய்வம் நீரே - 2
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்கு பாத்திரரே - 2

ஆராதனை உமக்கே (4)

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர் - 2
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே — 2

ஆராதனை உமக்கே (4)

2. எந்தன் பெலவீன நேரங்களில்
உம் கிருபை தந்தீரைய்யா - 2
இயேசு ராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே — 2

3. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
உம்மை புகழ்ந்து பாடிடுவேன் - 2
ராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணியே துதித்திடுவேன் — 2

**1. மகிழ்வோம் மகிழ்வோம்**
தினம் அகமகிழ்வோம்
இயேசு இராஜன் நம் சொந்தமாயினார் - 2
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார் - 2

ஆ ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே

இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார் - 2

2. சின்னஞ்சிறு வயதில்
என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டுக்கொண்டார் - 2
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார் - 2

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது
காத்துக்கொள்வார் - 2
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரைக்
காத்துக் கொள்வேன் - 2

4. அவர் வரும் நாளினில்
என்னைக் கரம் அசைத்து
அன்பாய்க் கூப்பிட்டுச்
சேர்த்துக்கொள்வார் - 2
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன் - 2

**21/12/2025**